**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | அ.சா.30 |
| Name | : | மல்லிகா |
| Husband Name | : | ரெங்கநாதன் |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 43/2025 |

**தேதி : 24.06.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் செட்டிக்குளத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எதிரி வசந்தியை லோன் வாங்கி கொடுத்த வகையில் எனக்கு தெரியும். எதிரி தன்னுடைய மாமனாருக்கு உடல்நிலைசரியில்லை என்று கூறி என்னிடம் லோன் வாங்கி கொடுக்கச்சொன்னார். நான்முதலில் முடியாது என்று சொன்னேன். அதன்பிறகு பெரம்பலூரில் உள்ள கிராமசக்தி நிதிநிறுவனத்தில் ரூ.50,000/- லோன் வாங்கிகொடுத்தேன். அந்த லோனுக்கான தவணை தொகையை எதிரியே கட்டிவிடுவதாக சொன்னார். அந்த லோனில் ரூ.10,000/-மட்டும் கட்டினார். ் அதன்பிறகு பெரம்பலூரில் உள்ள பேட் என்ற தனியார் நிதிநிறுவனத்திலிருந்து ரூ.25,000/- லோன் வாங்கிகொடுத்தேன். அந்த லோனுக்கான தவணை தொகையை வசந்தி கட்டிவிடுவதாக சொன்னார். ஆனால் அந்த லோனுக்கான தவணைகளை கட்டவில்லை. அதன்பிறகு நான் என்னிடம் இருந்து ரூ.23,000/- பணத்தை ரொக்கமாக எதிரியிடம் கடனாக கொடுத்தேன்.

வசந்தி கடன் நிலுவை தொகைக்கான தவணைகளை சரியாக செலுத்தவில்லை என்று நிதிநிறுவனத்தார் என்னிடம் வந்து பணம் கட்ட சொன்னார்கள். நான் என்னுடைய நகைகளை வைத்து தவணை தொகைகளை செலுத்திவருகிறேன். நான் எதிரியின் வீட்டிற்கு சென்று பார்த்தபோது அவருடைய வீடு பூட்டியிருந்தது. அக்கம் பக்கத்தில் விசாரித்தபோது அவர் எங்கு போனார் என்று தெரியவில்லை என்று சொன்னார்கள். அதன்பிறகு நாங்கள் மொத்தம் 40 பேர் எஸ்.பி. ஆபிஸிற்கு புகார் கொடுக்க சென்றோம். சத்தியா என்பவர் புகார் கொடுத்தார். அதன்பிறகு எதிரி எங்களுடைய பணத்தை திருப்பி தந்துவிடுவதாக சொன்னார். ஆனால்திருப்பிதரவில்லை. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விவரங்களைத்தான் போலீஸார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். என் வீட்டிற்கும், வசந்தி வீட்டிற்கும் சுமார் 1 கி,.மீ தூரம் இருக்கும். எனக்கு கடன் தொகை வாங்கி கொடுத்த வகையில் வசந்தி பழக்கம். போலீஸார் விசாரணை செய்தபோது எதிரியிடம் மாமனாருக்கு உடல்நிலைசரியில்லை என்று பணம் கேட்டார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். லோன் தொகையை வசந்தியே எடுத்துக்கொண்டார். முதலில் ரூ.50,000/- லோன் வாங்கிகொடுத்தபிறகு ஆறு மாதம் கழித்து ரூ.25,000/- லோன் வாங்கிகொடுத்தேன். நான் கூலி வேலை செய்கிறேன். என் கணவர் கொத்தனாராக வேலை செய்கிறார். 4, 5 பேரிடம் 5 ரூபாய் வட்டிக்கு கடன் வாங்கி ரூ.23,000/- வசந்தியிடம் கொடுத்தேன். மேற்படி விவரத்தை போலீஸார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான்கு தவணைகள் சரியாக கட்டினார்கள். நாங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து எதிரியிடம் பணம் கேட்டதால் அவரால் தரமுடியவில்லை என்றாலும், எதிரிக்கு எங்களை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லை என்றாலும் சரியல்ல.

நான் எதிரியின் கையில் ரூ.23.,000/- பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.